**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்.9/2023</u>**

பெயர்–திரு.சத்யன் நாள்.10.02.2026

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை–**

எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்திலிருந்து வரவில்லை. வாதி அழைத்தன் பெயரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரிக்கையில் உள்ள விவரங்களை நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. வழக்கு என்ன பரிகாரம் கோரி, யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால், வாதி நாகராஜ் பிரதிவாதிக்கு எதிராக பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் காலை எண் தெரியாது. விஸ்தீரணம் தெரியாது. பிரதிவாதி சேலத்தில் குடியிருக்கிறாரா என்றால், எனக்கு தெரியாது. சேலத்துகாரர் என்று சொல்வார்கள். வழக்கு சொத்திற்கு ஒட்டினாற்போல் பிரதிவாதி பூமி உள்ளது என்றால், சரிதான். தாவா சொத்தை உழவு செய்ய சென்ற போது, வாதியின் டிராக்டரை பிரதிவாதி தடுத்ததாக கூறியுள்ளேன் என்றால், சரிதான். எந்த தேதியில், எந்த நேரத்தில் தடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. மேற்சொன்னவாறு எந்தவித சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், பிரதிவாதி சேலத்தில் இருப்பதால், வாதியை இடைஞ்சல் செய்யவில்லை என்றாலும், சரியல்ல. நான் கோட்டுவீராம்பாளையம் கிராமத்தில் வசித்து வருவதற்கான ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆதார் அட்டையை தாக்கல் செய்துள்ளேன். வாதி எனது உறவினர் என்பதால், அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/ her to be correct.

SELVAM SUSILA Digitally signed by SELVAM SUSILA Date: 2026.02.10 17:00:58 +0530

District Munsif